**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 6

Name : எல்தோஸ் பிரினு

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:26.11.2025**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் நாகர்கோவில் புன்னைநகரில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது உறவினர், அவரது மகன் பெயர் ஸ்டாலின். ஸ்டாலின் நண்பர் பெயர் சுரேன்ராஜ். அவர் ஸ்டாலினின் அம்மாவை தவறாக பேசியதால் ஸ்டாலின் தற்கொலை செய்து கொண்டதாக சொன்னார்கள். போலீசார் என்னைவிசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் பாலன் எனது மனைவியின் சித்தப்பா. என்னை காவல்நிலையத்தில் 14.12.2021ம் தேதி விசாரித்தார்கள். ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக என்று தெரியாது. காவல்நிலையத்தில் வைத்தும் கையொப்பம் போட்டேன். பாலன் எனது உறவினர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 7

Name : சிலுவை மணி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 26.11.2025

**Accused Present**

<u>முதல் விசாரணை</u>–

நான் வள்ளியூரில் வசித்து வருகிறேன். அ.சா.4 பேபி கிளாடிஸ் எனது மனைவி. அ.சா.1 எனது மாமனார். இறந்து போன ஸ்டாலின் எனது மைத்துனர். ஸ்டாலின் அவரது நண்பர் சுரேன்ராஜு–டன் சண்டை போட்டு தகராறு ஏற்பட்டதால் இறந்து போனதாக எனது மனைவி சொன்னார். கேள்வி பட்டு தான் போனேன். நேரடியாக எனக்கு விஷயங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.4 எனது உறவனிர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352 /2023**

**Deposition of P.W. 8**

Name : சபீனா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 26.11.2025

**Accused Present**

**முதல் விசாரணை–**

நான் குலசேகரத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுவேலை செய்து வருகிறேன். பாலன் என்பவரை தெரியாது. ஸ்டாலின் என்பவரை தெரியும் எனது தம்பி கடையில் வேலை பார்த்து வந்தார். ஸ்டாலின் ஏன் இறந்தார் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரி அ.சா.1ன் வீட்டிற்கு சென்று தகராறு செய்து அவமரியாதையாக பேசியதால் ஸ்டாலின் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.